தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 – 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: **8-6-2015**

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## வேளாண் அனுபவத்தை சமூக ஊடகங்களின் மூலம் பகிர வேண்டும் - வேளாண் விரிவாக்கக் கல்வி இயக்குநர் பேச்சு

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகமும் ஹைதராபாத்தில் உள்ள இந்திய அரசின் தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவனமும் இணைந்து, சமூக ஊடகங்களின் மூலமாக வேளாண் நுட்பங்களை திறம்பட பகிர்வது குறித்து நான்கு நாள் பயிலரங்கம், **(8-6-2015** முதல் **11-6-2015** வரை**)** தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறுகிறது.

பயிலரங்க துவக்க விழாவில் கலந்து கொண்ட விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர். ஹ. பிலிப் அவர்கள், வேளாண் தொழில்நுட்பங்கள் மிக எளிதாக, குறைந்த செலவில் அனைவருக்கும் கிடைக்கும் வண்ணம் பயில்வதற்கு சமூக ஊடகங்கள் உகந்தது.

தற்போதுள்ள சூழலில் இளைய தலைமுறையினரிடையே இணைய தளங்களை பயன்படுத்தும் பழக்கம் அதிகரித்து வருகிறது. எனவே, சமூக ஊடகங்களில் வேளாண் தொழில்நுட்ப செய்திகளை அதிகம் பயன்படுத்தி இளைஞர்களின் கவனத்தில் கொண்டு, அவர்களை வசீகரிக்கும் வகையில் சமூக ஊடகங்களில் வெளியிடும்போது, அது இளைஞர்களின் மத்தியில் வேளாண் ஆர்வத்தினை ஏற்படுத்தும்.

எனவே, வேளாண் பல்கலை பேராசிரியர்களும், வேளாண் அறிஞர்களும் சமூக ஊடகங்களில் வேளாண் தொழில்நுட்பங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த இந்த பயிலரங்கம் வழிவகுக்கும் என்றார்.

முன்னதாக, தேசிய வேளாண் விரிவாக்க மேலாண்மை நிறுவன பேராசிரியர் முனைவர். அட்டலூரி ஸ்ரீனிவாசாச்சார்யுலு அவர்கள் வரவேற்புரை வழங்கினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் விரிவாக்க பேராசிரியர் முனைவர். எம். செந்தில்குமார் அவர்கள் நன்றியுரை கூறினார்.

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்


Training Programme on
Social Media for Effective Sharing of Agricultural Knowledge
Venue : Directorate of Extension Education
TNAU, Coimbatore
Date : 8-11 June, 2015

